# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
# TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
Lady Willingdon College Campus, Kamarajar Salai, Chennai - 600 005.
Phone: 044 - 28447304 Fax: 044 – 28447303 Website: www.tnteu.in


Official Communication No.TNTEU/R/St.Sc./Circular/2013/1672 Date:18.09.2013

பொருள்: கல்லூரிக் கல்வித்துறை–சுயநிதிக் கல்லூரிகள்–சுயநிதி கல்லூரிகளில் கல்வி பயிலும் ஆதி திராவிடர்/பழங்குடியினர்/மதம் மாறிய கிறிஸ்தவ ஆதி திராவிடர் மாணவ/மாணவியர்க்கு அரசு நியமித்த சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டணக்குழு நிர்ணயித்த கல்விக் கட்டணங்கள் மற்றும் அரசு நிர்ணயிக்கும் கல்விக் கட்டணங்கள் (2013–2014 கல்வியாண்டு ) போன்றவற்றை திரும்ப வழங்குவது – தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண்.6/ஆதி திராவிடர் (ம) பழங்குடியினர் நலத் (ஆதி.ந.3) துறை, நாள் 09–01–2012.
2. அரசாணை (நிலை) எண்.92/ ஆதி திராவிடர் (ம) பழங்குடியினர் நலத் (ஆதி.ந–3) துறை, நாள் 11–09–2012.
3. ஆதி திராவிடர் நலத்துறை இயக்குநரின் கடித ந.க.எண்.அ1/23643/09, நாள் 21–05–2013 மற்றும் 10–06–2013.
4. கல்லூரிக்கல்வி இயக்குநர் கடித ந.க.எண்.22217/ஆர்3/2013, நாள் 18.06.2013.

---

பார்வையில் காணும் அரசாணை, கல்லூரிக் கல்வி இயக்குநர் கடிதம் மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் ஆகியோரின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி சுயநிதிக் கல்லூரிகளில் கல்வி பயிலும் ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/மதம் மாறிய கிறித்தவ ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த மாணவ/மாணவியர்கள் கல்வி பயிலும் கல்வி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய கல்விக் கட்டணங்களில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளுக்கு அரசு நியமித்த சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டணக்குழு நிர்ணயித்துள்ள கல்விக் கட்டணங்கள் மற்றும் அரசு நிர்ணயிக்கும் கல்விக் கட்டணங்கள் போன்றவற்றை திரும்பப்பெற அவர்களின் பெற்றோர்/பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கும்பட்சத்தில் மாணவர்களுக்கு வழங்க அரசால் ஆணையிடப்பட்டு அதனை திறம்பட செயல்படுத்த வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வழிகாட்டு நெறிமுறைகள் இப்பல்கலைக்கழகத்தின் **www.tnteu.in** என்ற வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், பார்வை 3இல் காணும் ஆதிதிராவிட நல இயக்குநர் அவர்களின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி மைய அரசின் உதவித் தொகை திட்டத்தின்கீழ் கல்வி உதவித் தொகை பெறும் ஆதிதிராவிடர் மாணவ/மாணவியர்களுக்கு அவர்களின் பெற்றோர்/பாதுகாவலர் ஆண்டு வருமான வரம்பு ரூ.2.50 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி பெற்றோர்/பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்குள் இருக்கும் ஆதிதிராவிடர் மாணவர்களையும் பெற்றோர்/பாதுகாவலர் ஆண்டு

வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்குள் இருக்கும் பழங்குடியினர்/மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணவர்களையும் நிரந்தர ஜாதிச் சான்றிதழ் மற்றும் வருமானச் சான்றிதழ் (சம்பந்தப்பட்ட வட்டாச்சியரிடமிருந்து கடைசி ஆறுமாத காலத்திற்குள் பெற்றிருக்கப்பட வேண்டும் (Original & attested xerox copy) மாணவர் சேர்க்கையின் பொழுது மாணவர்களை சமர்பிக்க அறிவுறுத்தி மாணவர் சேர்க்கை அழைப்புக் கடிதம் (Admission call letter ) மற்றும் மாணவர் சேர்க்கை தொடர்பான விளம்பரங்களில் இத்தகவலை மாணவர்களுக்கு அளிக்கவும், மாணவர் சேர்க்கையின் பொழுது தகுதியுள்ள ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/மதம் மாறிய கிறித்தவ ஆதிதிராவிட மாணவர்களிடமிருந்து கண்டிப்பாக கல்விக் கட்டணங்களை வசூலிக்கக்கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது..

மேலும், அனைத்து சுயநிதி கல்லூரிகளிலும் கல்வி பயிலும் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் / மதம் மாறிய கிறித்துவ மாணவ/மாணவியர் பயனடையும் வகையில் இச்செயல்முறை மற்றம் அரசாணைகளை தங்களின் கல்லூரியில் உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அரசாணையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியும் சுயநிதி கல்லூரிகளில் உள்ள அனைத்து துறைகளின் அறிவிப்பு பலகையில் ஒட்டவும். அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளின்படி தகுதியுள்ள ஆதிதிராவிடர், பழங்குயினர், மதம் மாறிய ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவ/மாணவியர்களின் பெயர் விவரம், படிக்கும் வகுப்பி, சாதிப்பிரிவு, கட்டண விவரம் மற்றும் பெற்றோர்/பாதுகாவலரின் ஆண்டு யவருமானம் ஆகிய விவரங்களை உரிய ஆதாரங்களுடன் தொகுத்து மொத்த கேட்புத் தொகையை ஒவ்வொரு கல்லூரி முதல்வரும் சென்னை–6, கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு நேரடியாக அனுப்பிவிட்டு அதன் நகலை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது.

அரசு ஆணையினையும் கல்லூரிக்கல்வி இயக்குநர் கடிதத்தினையும் ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் கடிதத்தினையும் இப்பல்கல்க்கழகம் சார்ந்த கல்வியியல் கல்லூரிகள் செயல்முறைப்படுத்த வேண்டும் என்றும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ வகுப்பை சார்ந்த மாணவர் குறித்த விவரங்கள் எதுவும் விடுபடாமலும் அவர்களது சாதி மற்றும் பெற்றோரின் ஆண்டு வருமானம் போன்றவற்றின் உண்மைத் தன்மை குறித்தும் சம்பந்தப்பட்ட கல்லூரி முதல்வரே முழுபெறுப்பேற்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப் படுகின்றது.

17.09.2013.

பதிவாளர்(பொ)

பெறுநர்

முதல்வர்,
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்துடன்
இணைவு பெற்ற அனைத்து கல்வியியல் கல்லூரிகள்.